ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 2021.03.15


# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2021 பெப்புருவரி

## தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் பெப்புருவரியில் விரிவடைந்தன


**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளில் விரிவடைதல் காரணமாக 2021 பெப்புருவரியில் 59.4 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து அதன் விரிவடைதலில் நிலைத்திருந்தது.** மேலும், ஒட்டுமொத்த தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணையும் உயர்வான மட்டமொன்றில் நிலைத்திருப்பதற்குத் துணையளித்து கொள்வனவுகளின் இருப்பு அத்துடன் தொழில்நிலை அதேபோன்று நிரம்பலர் விநியோக நேரம் என்பன விரிவடைந்து காணப்பட்டன.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 59.4**

**2021 சனவரியுடன் ஒப்பிடுகையில் 0.8 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி**

மாதகாலப்பகுதியில் எதிர்வரவுள்ள பண்டிகைக் கால கேள்வியினை எதிர்பார்த்து விசேடமாக உணவு மற்றும் குடிபானத் துறை தயாரிப்பில் உற்பத்தி துணைச் சுட்டெண் அதிகரித்த அதேவேளை புதிய கட்டளைகள் உயர்வான சுட்டெண் பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தன. மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி தொடர்பில் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறை தயாரித்தலும் ஆரோக்கியமான சுட்டெண் பெறுமதிகளைப் பதிவுசெய்தது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு



: இலங்கை மத்திய வங்கி

சனவரியுடன் ஒப்பிடுகையில் பெப்புருவரியில் உற்பத்தியில் அதிகரிப்பிற்கமைய குறிப்பாக உணவு மற்றும் குடிபானங்கள் துறையில் தொழில்நிலை உயர்வான வீதத்தில் விரிவடைந்தது. எனினும், புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் துறை தயாரிப்பில் தொழில்நிலை மாதகாலப்பகுதியில் நடுநிலையான அடிப்படை அளவுமட்டத்தில் காணப்பட்டது.

| மாறி | சன | பெப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **60.2** | **59.4** | **-** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள்** | | | | |
| புதிய கட்டளைகள் | 60.9 | 60.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 57.1 | 61.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.6 | 52.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 59.8 | 58.3 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 76.1 | 63.9 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உற்பத்தி உயர்வான வேகத்தில் விரிவடைந்த போதிலும், சீனப் புத்தாண்டு விடுமுறைநாட்கள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வழங்கல் இடையூறுகளின் காரணமாக பிரதானமாக முன்னைய மாதகாலப்பகுதியில் திரட்டிய இருப்புக்களின் காரணமாக கொள்வனவுகளின் இருப்பு மெதுவான வீதத்தில் விரிவடைந்தது. மேலும், நிரம்பலர் விநியோக நேர துணைச் சுட்டெண்ணானது மாதகாலப்பகுதியில் மெதுவான வேகத்தில் நீட்சியடைந்தது.

நாட்டினுள் அதேபோன்று முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புவதற்கான எதிர்பார்க்கையுடன் அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேம்பட்ட மட்டங்களிலேயே காணப்பட்டன.

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2021 சனவரியில் 0.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பொன்றுடன் 2021 பெப்புருவரியில் 53.9 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

ஐரோப்பிய வலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு 2021 சனவரியில் உயர்வான வீதத்தில் அதிகரித்த அதேவேளை இந்தியா, சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளின் கொ.மு.சுட்டெண்கள் மெதுவான வீதத்தில் அதிகரித்தன.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 மாச்சு 14இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண் 2021 பெப்புருவரியில் 56.5 இற்கு அதிகரித்து பணிகள் துறை மேலும் மேம்படுவதனை எடுத்துக்காட்டியது.** இவ்வதிகரிப்பிற்கு புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகளில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் துணையளித்திருந்தன.

2021 பெப்புருவரியில் புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள், ஏனைய தனியாள் பணிகள் மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் அதிகரித்தன.

பணிகள் துறை வியாபார நடவடிக்கைகள், தொடர்ச்சியாக மூன்றாவது மாதத்திற்காகவும் 2021 பெப்புருவரியில் அதிகரித்தன. பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலையடைதலுடன் மாத காலப்பகுதியில் போக்குவரத்து மற்றும் நிதியியல் பணிகள் துணைத் துறைகள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. மேலும், க.பொ.த உயர்தரப் பரீட்சைகளின் பின்னர் உயர்கல்வி நிறுவனங்களுக்கு புதிய மாணவர்களை சேர்த்துக்கொள்வதன் காரணமாக கல்வித் துணைத் துறை தொழில் நடவடிக்கைகள் 2021 பெப்புருவரியில் விரிவடைந்தன. இதற்கு மேலதிகமாக, வேறு தனிப்பட்ட பணிகள் மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகள் துணைத் துறைகளும் 2021 பெப்புருவரியில் தொழில் நடவடிக்கைகளில் அதிகரிப்பொன்றினை அனுபவித்தன.

தொழில்நிலை துணைச் சுட்டெண்ணானது சில நிறுவனங்கள் தமது தொழில் நடவடிக்கைகளில் அதிகரிப்புக்கு இசைவாக புதிய ஊழியர்களை சேர்த்துக்கொள்ளத் தொடங்கியமையினால் 2021 பெப்புருவரியில் தொழில்நிலையில் வீழ்ச்சி நடுநிலை அடைதலைப் பிரதிபலித்து 50 கொண்ட நடுநிலையான அடிப்படை அளவு மட்டத்தினை எட்டியது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புடைய சுகாதாரக் கரிசனைகள் மூலம் இடைத்தடங்கல்களுக்குள்ளாகியிருந்த வியாபாரச் செயன்முறைகள் இயல்புநிலைக்குத் திரும்பியதன் மூலம் நிலுவையிலுள்ள பணிகள் 2021 பெப்புருவரியில் குறைவடைந்தன.

| மாறி | சன | பெப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **56.2** | **56.5** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 55.2 | 54.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கை | 60.9 | 62.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 43.8 | 49.5 | + | வீழ்ச்சியடைகின்றது , மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 53.3 | 46.8 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 67.7 | 69.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொவிட்-19 தடுப்புமருந்தேற்றல் தொடங்கப்பட்டதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் மீதான அதிகரித்த சாதகமான எண்ணப்பாங்கின் காரணமாக 2021 பெப்புருவரியில் எதிர்கால வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகள் மேலும் அதிகரித்தன.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 56.5**

**2021 சனவரியுடன் ஒப்பிடுகையில் 0.3 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு 2021 சனவரியின் 51.6 இலிருந்து 2021 பெப்புருவரியில் 52.8 இற்கு அதிகரித்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலைச் சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 பெப்புருவரியில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்ததை எடுத்துக்காட்டிய அதேவேளை, யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], மார்ச் 14, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.